DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.97/2018**

Deposition of witness for Prosecution ம.சா.2

Name : காளிமுத்து
Father/ Husband Name : விஜயராமன்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. கடந்த 15.01.2018ம் தேதி வீரப்ப செட்டியார் அவருடைய வீட்டில் இருந்து கோவிலுக்கு காலையில் புறப்பட்டு சைக்கிலில் சென்றுக்கொண்டிருக்கும் போது இராதாகிருஷ்ணன் வீட்டு அருகே சென்றுகொண்டிருந்த போது ஆஜர் 2ம் எதிரி இராமசாமி போய் அவரை சைக்கிலிருந்து கீழே தள்ளிவிட்டு கட்டையால் தலைக்கு பின்பக்கத்தில் அடித்தார். பின்னர் ஆஜர் 1ம் எதிரியும் பிரச்சினை செய்து கட்டையால் காலில் வீரப்ப செட்டியாரை அடித்துள்ளார். பிறகு நல்லமுத்து, ரவி மற்றும் நான் சேர்த்து ஆறாவயல் மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம்.

2. பின்னர் காரைக்குடி சரண்யா மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம். பின்பு சிகிச்சை அளித்த பிறகு மதுரைக்கு அழைத்துச் செல்ல சொன்னார்கள். பின்னர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமணைக்கு அழைத்து சென்று அங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்றார். பின்பு ஆறாவயல் போலீசார் வந்து நடவடிக்கை எடுப்பதாக சொல்லி வீரப்ப செட்டியாரிடம் எழுதி வாங்கி கொண்டு போனார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு சொந்த ஊர் ஆறாவயல். எனது ஆதார் முகவரி ஆறாவயல் கிராமத்தில் தான் உள்ளது. என் ஆதார் காட்டில் சண்முகநாதபுரம்

என்று முகவரி உள்ளது என்றால் சரிதான், எதிரிகளும் சண்முகநாதபுரத்தில் தான் உள்ளார்கள். நான் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு தான் வந்தேன் என்றால் சரியல்ல, நான் அங்கு தான் டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். சம்பவத்தை நேரடியாக பார்த்து தான் வந்தேன். சம்பவ இடத்திற்கும், டீ கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 30,50 அடி தூரம் இருக்கும்.

2. டீ கடை யாருக்கு சொந்தமானது என்றால் யார் நடத்துகிறார் என்று தெரியாது. டீ கடை நடத்துபவர் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தெருவில் டீ கடையே இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வீரப்ப செட்டியாரிடம் எத்தனை வருடங்கள் டிரைவராக வேலைப்பார்த்தேன் என்றால் 20 வருடமாக வேலை பார்த்தேன், சம்பவத்திற்கு பிறகு அவரிடம் வேலை பார்க்கவில்லை. சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் காலை 06.30 மணிக்கு.

3. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் வீரப்ப செட்டியாரிடம் வேலை பார்த்ததால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் நேரில் பார்த்ததால் தான் மருத்துவமணைக்கு அழைத்துச் சென்றேன். வீரப்ப செட்டியாருக்கு எந்த காலில் காயம் ஏற்பட்டது என்றால் இடது காலில். இடது காலில் எந்த பகுதியில் அடிப்பட்டது என்றால் தொடைப் பகுதியில் அடிப்பட்டது. சம்பவம் நடைபெற்ற பகுதியில் எனக்கு வீடு உள்ளது.

4. ஆறாவயலும், சண்முகநாதபுரமும் வேறு, வேறு பகுதியா, ஒரே பகுதியா என்றால் வேறு வேறு பகுதி. சம்பவம் சண்முகநாதபுரத்தில் நடைபெற்றது. எனக்கு முகவரி சண்முகநாதபுரம் நடுவீதி தான் உள்ளது. நான் சொல்லவது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.